# மாணவர்களுக்கான மணிக்கதைகள்

## இரண்டு வார்த்தை

பாரதத் திருநாட்டின் எதிர்காலம் சிற்பிகளாக விளங்கப் போகிறவர்கள் மாணவ, மாணவியர். அந்த இளம் நெஞ்சங்களில் எதனை விதைக்கிறதோ அதனையே அறுவடை செய்யவும் முடியும். களர் நிலத்திலே முட்கள் தான் முளைக்க முடியும். நல்ல பண்பட்ட நிலத்தில்தான் பயிர் செழித்து வளரும்.

அதேபோல் மாணவ மணிகளின் உள்ளத்தைப் பண்படுத்தும் இலட்சியத்தின் அடிப்படையில்... ''மாணவர்களுக்கான மணிக்கதைகள்'' என்னும் தலைப்பில் இந்நூல் உதயமாகியுள்ளது. நம்முடைய பாரத தேசம் அடிமைப்பட்டதற்கு மூலகாரணம் நம்முடைய முன்னோர்களைப் பற்றிய கல்வியினை அளிக்கத் தவறியதுதான்.

அதன் காரணமாகவே பாரத மக்கள் ஒற்றுமையை இழந்து பலவீனர்களாக மாறினார்கள். அதைப் பயன்படுத்திக் கொண்டு அன்னியர் இந்த தேசத்தை அடிமை கொண்டனர். அப்போதும் அன்னியரின் முன்னோர்களைப் பற்றி படிப்பதற்கே இந்த தேசத்துப் பிள்ளைகள் பயிற்றுவிக்கப்பட்டார்கள். நம் முன்னோர்களின் வீரத்தையும், பெருமைகளையும் எடுத்துச் சொல்வதற்கு ஒருவரும் இருக்கவில்லை. இந்த நிலையே எல்லாத் தாழ்வுகளுக்கும்

காரணமாக அமைந்தது. நம்முடைய புராண இதிகாசங்களில் நம் முன்னோர்களைப் பற்றிய பல அரிய பொக்கிஷங்கள் புதைந்து கிடக்கின்றன. தத்துவங்கள் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றன. வழிகாட்டும் கலங்கரை விளக்கங்கள் நிறைந்திருக்கின்றன.

இவைகளை வெளியே கொண்டு வந்து மாணவ சமுதாயம் படிக்கும்படி செய்ய வேண்டும். அந்த முயற்சியில் பல்வேறு கோணங்களில் 28 கதைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

எதிர்கால இந்தியாவை உருவாக்க இருக்கும் மாணவ மணிகள் இந்நூலை ஆர்வமுடன் படித்துத் தங்கள் பாடங்களில் நிறைந்த மதிப்பெண்களைப் பெற வேண்டும்; தெய்வப் பற்றுடையவர் களாகத் திகழ வேண்டும். பெரியோர்களைப் போற்றும் பண்புள்ளவர்களாக வளர வேண்டும். மகத்தான சாதனைகளைப் படைக்க வேண்டும். இந்தப் புண்ணிய பூமிக்கு மாபெரும் பெருமைகளைச் சேர்த்திட வேண்டும்.

இந்நூலைப் படிக்கும் மாணவ மாணவியர் மட்டுமன்றி மற்ற அன்பர்கள் அனைவருக்கும் நீங்காத செல்வம் நிறைந்து வாழ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகளின் திருவடிகளைச் சிந்திக்கிறேன்.

ஸ்வாமிகளின் திருவடிகளில்...

– பரமஹம்ச ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்